# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

## MCOP. No.134/2024

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 05–ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பால்ராஜ் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை:**

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை வரவில்லை. விபத்து சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எனது கிராமம் அடைக்கம்பட்டி. இறந்துபோன கார்த்தி எங்கள் ஊரை சேர்ந்தவர். அவர் மனைவி தகவல் சொல்லி இன்று சாட்சியம் அளிக்கிறேன். எங்கள் ஊருக்கும் பெரம்பலூர் – துறையூர் ரோட்டிற்கும் இடையே சுமார் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். அந்த ரோடு கிழமேல் ரோடாகும். அடைக்கம்பட்டி செல்வதற்கு அந்த ரோட்டிலிருந்து வடக்குபுறமாக திரும்பி செல்லவேண்டும். விபத்து நடந்த நேரம் இரவுநேரமாகும். அடைக்கம்பட்டி பிரிவு ரோட்டில் பிரிவதற்கு முன்பாக உள்ள ஒரு கல்குவாரிக்கு பிரியும் ரோட்டின் அருகே இந்த விபத்து நடந்தது என்றால் சரிதான். அந்த இடம் இருட்டான இடமாகும். அங்கு மின்கம்பம் கிடையாது

என்றால் சரிதான். பெட்ரோல் பங்கிற்கும் கல்குவாரி பிரிவு சாலைக்கும் இடையே சுமார் 200 மீ தூரம் இருக்கும். என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் நான் அன்று பெட்ரோல் பங்கில் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் விபத்து நடந்த பின்னர் போய் பார்த்தேனா என்றால் விபத்து நடக்கும் போது பார்த்தேன். நான் விபத்து சமயத்தில் பெட்ரோல் பங்கில் இருந்ததாகவும், விபத்தை பார்த்ததாகவும் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இறந்துபோனவர் எங்கள் ஊர்க்காரர் என்பதால் மனுதாரர்களுக்கு உதவவேண்டும் என்பதற்காக பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.